






மாநில உரிமை மீட்பு முழக்கமாக, கழக இளைஞர் அணியின் 2வது மாநில மாநாட்டை வெற்றி மாநாடாக்கிடும் வகையில், நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில், தி.மு.க இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டம், நேற்று நடைபெற்றது. இதில் தி.மு.க. இளைஞர் அணி செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் நீட் தேர்வுக்கு எதிராக தி.மு.கழகத்தால் தொடங்கப்பட்டுள்ள, 'நீட் விலக்கு நம் இலக்கு' கையெழுத்து இயக்கத்திற்கு ஆதரவளித்து நீலகிரி மாவட்டத்தில் நீட்டுக்கு எதிராக பெறப்பட்ட 30 ஆயிரத்துக்கும் அதிகமான கையெழுத்துகளை கொண்ட அஞ்சல் அட்டைகளை, அமைச்சர் உதயநிதி ஸ்டாலினிடம் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா வழங்கினார். இதில் அமைச்சர் கா.ராமச்சந்திரன், மாவட்டக் கழகச் செயலாளர் பா.மு.முபாரக் மற்றும் கழக நிர்வாகிகள், தோழர்கள், இளைஞரணி நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்துக்கு

# 'விளையாட்டை ஊக்குவிக்கும் சிறந்த மாநிலம்' பட்டம்!

## திராவிட மாடல் அரசின் முயற்சிகளுக்கு சான்று என அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்!

சென்னை, டிச 3-

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இந்திய தொழில் கூட்டமைப்பு சார்பாக 2023க்கான'விளையாட்டை ஊக்குவிக்கும் சிறந்த மாநிலம்' என்ற பட்டத்தை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் பெற்றிருப்பதை குறித்து ட்விட்டர் பக்கத்தில் நெகிழ்ந்து பதிவிட்டுள்ளார்.

தமிழ்நாடு அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறையின் கீழ் உள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு இந்திய தொழில் கூட்டமைப்பு (CII) சார்பில் 2023க்கான 'விளையாட்டை ஊக்குவிக்கும் சிறந்த மாநிலம்' விருது வழக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தனது ட்விட்டர் பக்கத்தில் பதிவிட்டிருப்பது, "இந்த அங்கீகாரம், தமிழகத்தில் விளையாட்டு சாம்பியன்களை உருவாக்கி வளர்ப்பதற்கு நமது திராவிட மாடல் அரசு மேற்கொண்ட முயற்சிகளுக்கு ஒரு சான்றாகும். தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் முயற்சிகளை அங்கீகரித்ததற்காக இந்திய தொழில் கூட்டமைப்புக்கு (CII) நன்றி தெரிவிக்கிறேன்." என குறிப்பிட்டுள்ளார்.

ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் இந்திய தொழில் கூட்டமைப்பின் தொழில் மற்றும் விளையாட்டு துறை சார்ந்த ஸ்கோர்க் கார்ட் (Scorecard) கருத்தரங்கத்தின் 8வது பதிப்பு டெல்லியில் வருகின்ற டிசம்பர் 4ம் தேதி ஹயாத் ரெஜென்சியில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு விளையாட்டை ஊக்குவிக்கும் சிறந்த மாநிலம் என்ற விருதை வழங்கவுள்ளார்கள்.

இந்திய தொழில் கூட்டமைப்பு (CII) என்பது இந்தியாவின் முதன்மையான வணிக கூட்டமைப்பாகவும், இதில் நாடு முழுவதும் 9,000 உறுப்பினர்கள் மற்றும் 300 தேசிய மற்றும் சர்வதேச பெருநிறுவன பங்குதாரர்கள் உள்ளனர். இந்திய தொழில் கூட்டமைப்பு (CII) இந்தியாவின் தொழில் மற்றும் வணிக சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிறது. மேலும் அரசுடன் இணைத்து பொருளாதார வளர்ச்சி மற்றும் மேம்பாட்டை ஊக்குவிக்கும் கொள்கை வடிவமைப்பு என பல்வேறு வகையில் இணைத்து செயல்பட்டுவருகிறது.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மாநிலத்தில் விளையாட்டு வளர்ச்சிக்கு முக்கியப் பங்காற்றுகிறது, சமூகத்தின் அனைத்து பகுதிகளிலிருந்து அனைவரும் பங்கேற்பதை ஊக்குவிக்க பல்வேறு முயற்சிகளை செயல்படுத்துகிறது. குறிப்பாக முக்கிய விளையாட்டு நிகழ்வுகளை நடத்துவதிலும், உள்கட்டமைப்பை மேம்படுத்துவதிலும், விளையாட்டு வீரர்களின் நலன் காப்பதிலும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் முக்கிய பங்கு வகிக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

திராவிட மாடல் அரசின் முயற்சிகளுக்கு கிடைத்த சான்று என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



மாநில உரிமை மீட்பு முழக்கமாக, கழக இளைஞர் அணியின் 2வது மாநில மாநாட்டை வெற்றி மாநாடாக்கிடும் வகையில், நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில், தி.மு.க இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டம், நேற்று நடைபெற்றது. இதில் தி.மு.க. இளைஞர் அணி செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் மாநாட்டு நிதியாக நீலகிரி மாவட்ட கழகம் ரூ.1 கோடியும், இளைஞர் அணி அமைப்பாளர் சார்பில் ரூ.10 லட்சம், இளைஞர் அணி நிர்வாகிகள் சார்பில் ரூ.12 லட்சம் ஆகிய தொகைக்கான காசோலையினை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் வழங்கினர். இதில் கழக துணைப் பொதுச் செயலாளர் ஆர்.இராசா எம்.பி., அமைச்சர் கா.ராமச்சந்திரன், மாவட்டக் கழகச் செயலாளர் பா.மு.முபாரக் மற்றும் கழக நிர்வாகிகள், தோழர்கள், இளைஞரணி நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



சேலம் மாவட்டம் பெத்தநாய்க்கன் பாளையத்தில் மாநில தி.மு.க இளைஞரணியின் 2வது மாநாடு டிச.17ல் நடைபெறுவதையொட்டி பந்தல் திடல் அமைக்கும் பணி நடை பெற்று வருவதை கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, கடலூர் கிழக்கு மாவட்டக் கழக செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம். ஆகியோர் பார்வையிட்டனர். உடன் சேலம் மாவட்ட தி.மு.க. செயலாளர்கள். எஸ்.ஆர். சிவலிங்கம் (கிழக்கு) இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. (மத்திய மாவட்டம்) டி.எம்.செல்வகணபதி (மேற்கு) எஸ்.ஆர்.பார்த்திபன் எம்.பி. கிழக்கு மாவட்ட துணைச்செயலாளர்கள். க சுரேஷ்குமார். கு.சின்னதுரை, ஏ.ஏ.ஆறுமுகம், புலாவரி எஸ்.சேகர் உட்பட நிர்வாகிகள் இருந்தனர்.